தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 6, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஆகஸ்ட் 22, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்."

பிறருக்குத் தீங்கு விளைவித்துவிட்டோம் என்று ஒருவர் மகிழ்ந்துகொண்டிருக்கும்போதே, அதேபோன்ற தீங்கு அவரையே தாக்கும்.

1. இரங்கல் தீர்மானம்

ஷெனாய் இசை மேதை திரு. பிஸ்மில்லா கான் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "இதயத்தை ஊடுருவும் ஆழங்காண முடியாத இனிய இசைமூலம் இந்திய மக்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தி வந்த ஷெனாய் இசை மேதை பாரத் ரத்னா பிஸ்மில்லா கான் தனது 91–வது அகவையில் 21–8–2006 (திங்கட்கிழமை) அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

ஓர் இசைக் கலைஞர் பெறக்கூடிய அனைத்து விருதுகளையும், கௌரவங்களையும், பெருமையையும், புகழையும் பெற்றிருந்தபோதிலும், எளிமையான வாழ்க்கையையே தன் கடைசிக் காலம் வரை கடைப்பிடித்து வந்தார்.

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேறியது.)

***TMT. BADER SAYEED:** Honourable Speaker Sir, May I say some words about Ustad Bismillah Khan?

HON. SPEAKER: It is already over. The next item is Question Hour. Please sit down.

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

61—

கட்டடம்

***1326—திரு. பி.என். பெரியண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் செயல்பட்டு வரும் உதவிக் கோட்ட மின் பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரில் தற்போது செயல்பட்டு வரும் உதவிக் கோட்ட மின் பொறியாளர் அலுவலகம், நகரின் மையப் பகுதியில் பொது மக்கள் வசதிக்கேற்ப உள்ளதால், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்துத் தற்போது ஏதும் திட்டம் இல்லை.